

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா' என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், மதுராந்தகம் மற்றும் காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாகச் சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் சார்பில் தயாரிக்கப்பட்ட "அன்றும் ! இன்றும்! என்றும்! சிறுபான்மையின மக்களின் காப்பான் தி.மு.க." என்ற புத்தகத்தினை வெளியிட்டார். உடன் கழகத்தின் பொதுச்செயலாளரும், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சருமான துரைமுருகன், கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு தலைவர் மைதீன்கான், செயலாளர் சுபேர்கான் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (4.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு கம்மநாயுடு மகாஜன சங்கத்தின் மாநிலத் தலைவர் ரவீந்திரன் கெங்குசாமி நாயுடு, மாநில செயல் தலைவர் வி.மோகன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, கோவை – அவிநாசி மேம்பாலத்திற்கு ஜி.டி. நாயுடு அவர்களின் பெயர் சூட்டியதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் உள்ளனர்.

### கோவை - அவிநாசி மேம்பாலத்திற்கு ஜி.டி.நாயுடு பெயர்!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - தமிழ்நாடு கம்மநாயுடு மகாஜன சங்கம் நன்றி!

## மாநில செயல் தலைவர் வி.மோகன் தலைமையில் நிர்வாகிகள் சந்தித்து தெரிவித்தனர்!

சென்னை, நவ. 5 -

கோவை - அவிநாசி மேம்பாலத்திற்கு ஜி.டி.நாயுடு பெயர் சூட்டியதையடுத்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, தமிழ்நாடு கம்மநாயுடு மகாஜன சங்க மாநிலச் செயல் தலைவர் வி.மோகன் தலைமையில் நிர்வாகிகள் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (4.11.2025) காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், தமிழ்நாடு கம்மநாயுடு மகாஜன சங்க மாநில நிர்வாகிகள், மாநில செயல் தலைவர் வி.மோகன் தலைமையில் நேரில் சந்தித்து, கோவை - அவிநாசி மேம்பாலத்திற்கு ஜி.டி. நாயுடு பெயர் சூட்டியதற்கு நன்றி தெரிவித்தனர்.

அதுபோது கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் உடனிருந்தனர்.

### திருவள்ளூர் மாவட்டத்தில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து

# 6 நபர்களின் 5 வாரிசுதாரர்களுக்கு ரூ.18 இலட்சத்திற்கான காசோலைகள்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினார்!

திருவள்ளூர், நவ. 05;

முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிபூண்டி வட்டம், பொன்னேரி வட்டம், பூவிருந்தவல்லி வட்டம் ஆகிய பகுதிகளில் 03.11.2025 அன்று நீரில் மூழ்கி உயிர் இழந்த 6 நபர்களின் 5 வாரிசுதாரர்களுக்கு ரூ.18 இலட்சத்திற்கான காசோலைகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினார்.

முன்னதாக, கும்மிடிபூண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் கடந்த 31.10.2025 அன்று எண்ணூர் கடற்கரை பகுதியில் இறந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட கும்மிடிபூண்டி வட்டத்தை சேர்ந்த திருமதி. தேவகி(30) த/பெ செல்வம் கும்மிடிபூண்டி இலங்கை அகதிகள் மறுவாழ்வு முகாம் பொத்திக்குப்பம், செல்வி. காயத்திரி(18)த/பெ மாதவன் தேர்வழி, செல்வி, ஷாலினி(18) த/பெ ஜம்புலிங்கம் பெரியஓபுளாபுரம், பொன்னேரி வட்டத்தை சேர்ந்த திருமதி. பாவனி(19) க/பெ செல்வகுமார், கோளூர் தேவம்பட்டு பகுதிகளை சேர்ந்த 4 நபர்களின் வாரிசுதாரர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.3 இலட்சம் வீதம் மொத்தம் ரூ,12 இலட்சம் மதிப்பிலான நிதி உதவிகளுக்கான காசோலைகள்

அதனைத்தொடர்ந்து திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் கடந்த 1.11.2025 அன்று பூவிருந்தவல்லி வட்டம் அயனம்பாக்கம் பகுதியை சேர்ந்த தமீம்அன்சாரி (எ) தமிழரசுவசந்தா தம்பதியினரின் 2 குழந்தைகள் செல்வன்.ரியாஸ் (5) மற்றும் செல்வன்.ரிஸ்வான்(3) ஆகியோர் நீரில் மூழ்கி உயிரிழந்ததால் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.3 இலட்சம் வீதம் மொத்தம் ரூ,6 இலட்சம் மதிப்பிலான நிதி உதவிக்கான காசோலைகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் வழங்கி ஆறுதல் கூறினார் .

அதனைத்தொடர்ந்து, கும்மிடிபூண்டி இலங்கை அகதிகள் மறுவாழ்வு முகாம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் 198 வீடுகளின் கட்டுமான பணிகள், சாலை வசதிகள், மழைநீர் வடிகால்வாய்கள் உள்ளிட்ட அமைச்சர் சா.மு. நாசர் நேரில் பார்வையிட்டு பின் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

தமிழக முதல்வர் அவர்கள் நம் தொப்புள் கொடி உறவுகளாக இருக்கின்ற புலம் பெயர்ந்த இலங்கை தமிழருடைய வாழ்வாதாரத்தை உயர்த்தப்பட வேண்டும் என்பதற்கிணங்க, தமிழகம் முழுவதும் இருக்கின்ற 103 முகாம்களில் இருக்கும் 19660 குடும்பங்கள் அந்த குடும்ப ங்களுக்கு வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்ற அடிப்படையில் ஒட்டு மொத்தமாக 10469 வீடுகள் கட்டப்படும் என தனது விதி எண்110 அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அதற்காக 620 கோடி ஒதுக்கீடு செய்தார்கள். அதற்கான முதல் கட்ட பணிகள் வீடுகள் 3510 வீடுகள் ரூபாய் 136 கோடியிலும், இரண்டாம் கட்ட பணி 3959 வீடுகள் ரூபாய் 228 கோடி மதிப்பீட்டிலும், மூன்றாம் கட்டமாக 3000 வீடுகள் ரூபாய் 206 கோடி ஒதுக்கப்பட்டு இன்றைய தினம் மொத்த வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்ட வீடுகள் 3246 வீடுகள். ஒப்படைக்கப்பட தயார் நிலையில் இருக்கின்ற வீடுகள் 772 வீடுகள், பணிகள் நடைபெற்று வருகின்ற 5527 வீடுகள் நிலுவையில் கட்டப்பட்டு வருகின்ற வீடுகள் 426. திருவள்ளூர் மாவட்டம் பெத்திக்குப்பம் பகுதியில் இலங்கை தமிழர் முகாமில் உள்ள 198 வீடுகளின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 168 வீட்டு பணிகள் முடிக்கப்பட்டு உள்ளது. மிக விரைவில் முதலமைச்சர் அவர்கள் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட உள்ளது. அதனுடைய பணிகளை ஆய்வு செய்வதற்காக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் நேரடியாக பார்வையிட்டு ஆய்வு செய்தோம். மேலும் இம்முகாம்களில் தங்கி உள்ளவர்களின் வாழ்வாதாரத்திற்கு தேவையான 15 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு 12கி அரிசி, 15 வயதிற்கு கீழ் உள்ளவர்களுக்கு 6கி அரிசி, குடும்ப தலைவருக்கு மாதந்தோறும் ரூ.1500, 110 வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு ரூ.500, பாலிடெக்கினிக் பயிலும் மாணவர்களுக்கு ரூ.10,000. பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு ரூ.15000, முதுநிலை பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு ரூ.20000 அதற்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு அரசே முழு செலவும் ஏற்கும். 821 மகளிர் சுயக்குழுக்களை சேர்ந்தவர்கள் சுய தொழில் செய்ய ரூ, 125000 வழங்கப்படுகிறது. அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்பான திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், கும்மிடிபூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜே. கோவிந்தராஜ் திருவேற்காடு நகர்மன்ற தலைவர் என்.இ.கே. மூர்த்தி பொன்னேரி சார் ஆட்சியர் கு.ரவிகுமார், கும்மிடி பூண்டி வட்டாட்சியர் சுரேஷ் குமார், திருவேற்காடு நகராட்சி ஆணையர் பே.ராமர், பூவிருந்தவல்லி வட்டாட்சியர் உதயம் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.




